

திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோயிலில் அம்மன் சன்னதி வளாகத்தில் இரண்டாம் பிரகாரம் கல்மண்டபம் புதுப்பிக்கும் பணிகள், மேற்கூரையில் புதியதாக தட்டோடு பதிக்கும் பணிகள், புதுப்பித்து கட்டப்பட்ட கருஉருமாறி தீர்த்தக்குளம் போன்ற முடிவுற்ற திட்டப்பணிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவை தலைவர் மு.அப்பாவு, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.சுகுமார், தலைமையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நேற்று (02.01.2026) திறந்து வைத்தார்கள். உடன் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையாளர் மருத்துவர். மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு, முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.மனோஜ் பாண்டியன், முக்கிய பிரமுகர் கிரகாம்பெல் உட்பட பலர் உள்ளனர்.

### வசை பாடியவர்கள் வாழ்த்துகின்ற அளவிற்கு

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பல்வேறு திருப்பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

திருச்செந்தூர், ஜன.3-

வரும் பிப்ரவரி மாதத்திற்கு பின் வசை பாடியவர்கள், குறை சொல்பவர்கள் வாழ்த்து பாடுகின்ற அளவிற்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆன்மிக பொக்கிஷமாக திகழும் என்று அங்கு ஆய்வுக்கு பின், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (02.01.2026) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் அறுபடை வீடுகள் காட்சியரங்கம், நாழிக்கிணறு புனரமைப்பு பணிகள், சூரசம்ஹார காட்சியரங்கம், சஷ்டி மண்டபம், விபூதி தயாரிப்பு கூடம், பஞ்சாமிர்த தயாரிப்பு கூடம், பக்தர்கள் தங்கும் விடுதி ஆகிய திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கடந்த ஆட்சியில் அதாவது 2021க்கு முன்பு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பெருந்திட்ட வரைவின் கீழ், திருப்பணிகளை மேற்கொள்ள ஹெச்.சி.எல். என்ற தனியார் நிறுவனம் அனுமதி கோரிய நிலையில் 10 ஆண்டுகள் அனுமதி வழங்கப்படாமல் கிடப்பில் இருந்தது, தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக ஆட்சி ஏற்பட்டவுடன் அந்நிறுவனம் அணுகியவுடன், அதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்பட்டது. மாஸ்டர் பிளான்



திருப்பணிகள் இரண்டு கட்டங்களாக அதாவது ஹெச்.சி.எல். நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் ஒரு பகுதியாகவும், திருக்கோயில் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றொரு பகுதியாகவும் எடுத்துக் கொள்ளப்பட்டன. திருப்பணிகள் அனைத்தும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு உலகெங்கும் வாழும் முருக பக்தர்கள் திரும்பி பார்க்கின்ற வகையில் கடந்த 07.07.2025 அன்று குடமுழுக்கு வெகு விமரிசையாக நடத்தப்பட்டதை எவரும் மறுக்க முடியாது.

**500 பேர் தங்கும் வகையில் அறைகள்!**

மேலும். பக்தர்களின் வசதிக்காக அறுபடை வீடுகளுக்கு சென்று தரிசனம் செய்வதற்கு இணையாக ஏற்கனவே ஒரு படை வீடு திருச்செந்தூரில் அமைந்திருப்பதால் மீதமிருக்கின்ற ஐந்து படை வீடுகளையும் அமைகின்ற பணிகளும், இரண்டு சஷ்டி மண்டபங்கள், 500 நபர்கள் தங்குகின்ற வகையிலான டார்மண்ட்ரி அறைகளும், கூடுதல் சுகாதார வளாகங்கள், கழிவு நீரிலுள்ள கழிவுகளை அகற்றி மறுசுழற்சி செய்திடும் வகையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், நாழிக்கிணறு புனரமைப்பு பணிகள் ஆகியவற்றை அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தோம். இந்த அனைத்து பணிகளையும் பிப்ரவரி மாத இறுதிக்குள் நிறைவு செய்து, பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான அறிவுரைகளை வழங்கியிருக்கின்றோம்.

**விஷமத்தன பிரச்சாரங்கள்**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்தளவில் ஆன்மிகத்திற்கு எதிரான ஆட்சி என்று பரப்புரை மேற்கொள்ளுகின்ற விஷமத்தன பிரச்சாரங்களுக்கு முடிவு கட்டுகின்ற ஒரு கோயிலாக திருச்செந்தூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பெருந்திட்ட வரைவு அமையும் என்று நம்புகின்றோம். இந்த ஆட்சியின் மீது வசை பாடியவர்கள், குறை சொல்பவர்கள் வரும் பிப்ரவரி மாதத்திற்கு பிறகு வந்து பார்த்து வாழ்த்து பாடுகின்ற அளவிற்கு இந்த முருகன் திருக்கோயில் ஒரு பொக்கிஷமாக திகழும்.

திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே போகிறது. பக்தர்களின் தேவைகளுக்கேற்ப கூடுதலாக திட்டமிட்டு, அதாவது இன்னும் 20 ஆண்டுகளுக்கு பிறகு என்ன தேவையோ அதையும் கட்டமைக்கின்ற பணியிலே ஈடுபட்டு இருக்கின்றோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பெருந்திட்ட வரைவின் கீழ், திருச்செந்தூர், பழனி, கன்னியாகுமரி, மருதமலை திருத்தணி என 19 திருக்கோயில்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அனைத்து திருக்கோயில்களின் பணிகளும் நிறைவு பெறுகின்ற போது உண்மையான ஆன்மிக மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை அனைவரும் ஒத்துக் கொள்ளகின்ற நிலை உருவாகும்.

சஷ்டி விழாவின் போது தற்காலிக பேருந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அந்த இடங்களில் நிரந்தர பேருந்து நிலையங்களை உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது இறுதி கட்டப்பணி பேருந்து நிலையம் தான். அந்த பணியும் நிறைவுறும் போது பக்தர்களுக்கு அவர்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் அமையும் என்று நம்புகிறோம். சுமார் 66 ஏக்கர் நிலப்பரப்பிலே அமைந்திருக்கின்ற இந்த திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றி தருவோம்.

**ஆன்லைன் மூலம் புக்கிங்!**

இத்திருக்கோயில் தரிசனத்திற்கு ஆன்லைன் மூலம் புக்கிங் செய்யும் வசதியினை உருவாக்குவதற்கான பணிகளை துவங்கியவுடன் சிலர் நீதிமன்றத்திற்கு சென்றிருக்கின்றார்கள். நீதிமன்றமும் ஆன்லைன் எப்படி செய்யப் போகின்றனர் என்ற கருத்துருக்களை முழுமையாக பெறாமலே தடை கோரி வந்திருக்கிறீர்கள், ஆகவே எந்த விதமான தடையும் வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளது. திருக்கோயில்களின் வளர்ச்சி பணிகளுக்கு நாங்கள் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் தடைகளை ஏற்படுட்டுவதற்கு ஒருபுறம் முயற்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. தடைகள் பல உண்டு என்றாலும் அதை தகர்த்தெறிந்து பக்தர்களுடைய தேவைகளை நிறைவு செய்கின்ற திறன்மிக்க தோள்களும், மதிநுட்பமும் தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் உண்டு என்ற வகையில் தடைகளை தகர்த்து தான் இந்த பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். செய்தியாளர்கள் கோரியது போல் ஆன்லைன் வசதிகள், பிரேக் தர்ஷன் போன்றவற்றை கொண்டு வருவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் கைபேசியினை கொண்டு செல்கிறார்களே என்று கேட்டீர்கள். ஒரு அரசே அனைத்தையும் கட்டுப்படுத்தி நிறுத்தி விட முடியாது. பக்தர்களுக்கும் அதில் அக்கறை இருக்கின்றது. அவர்களும் சட்டத்தை மதித்து இது போன்ற சூழல்களில் பிறப்பிக்கிறப்படுகின்ற உத்தரவுகளை கடைபிடிக்க வேண்டும் என்று துறையின் அமைச்சர் என்ற முறையில் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை.இரவிச்சந்திரன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், இந்து சமய அறநிலையத்துறை தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, மண்டல இணை ஆணையர்கள் எம்.அன்புமணி, திருமதி கவிதா பிரியதர்ஷினி, திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் கே.ராமு, துறை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.





மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, மண்டலம்–11, வார்டு–148, நெற்குன்றம் பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று புவனேஸ்வரி அம்மன் நகர், ஜீரோ பாயின்டில் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு பாலம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி துணை செயலாளர் தீ.பாலாஜி, வட்ட கழக செயலாளர் S.ரமேஷ்ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள், பொது நலச் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

# பொங்கலிட்டுக் கொண்டாடுவோம் பூமியின் மரபணுவை!

## கணையாழி தலையங்கம்!

புத்தாண்டும் பொங்கலும்
வரிசையாக ஆண்டு தோறும்
வரும் எனினும்
இந்த ஆண்டு - தேர்தல் ஆண்டு
வாழ்த்திக்கொள்வோம்!

சூரியனுக்குப் பொங்கலிட்டு
வாழ்த்திக்கொள்வோம்!
புத்தாண்டு - பொங்கல்
வாழ்த்துகள்!

ஏனெனில்
பூமியின் மரபணு
சூரியனில்!

சூரியன் இல்லையேல்
பூமி இல்லை!
புத்தாண்டு இல்லை!
பொங்கல் இல்லை!
காலத்திற்குப்
பகல் இரவு இல்லை
சிறு பொழுது இல்லை
கார்காலம்
கூதிர்காலம்
முன்பனி, பின்பனி
இளவேனில், முதுவேனில் எனும்
பருவங்கள் இல்லை!
பெரும் பொழுது இல்லை!

கடந்த காலம்
நிகழ் காலம்
வரும் காலம் எனும்
வரிசை இல்லை!
வரலாறு இல்லை
கொண்டாட்டம் இல்லை!

வரிசையின் பழமையில்தான்
பிறக்கிறது புதுமை!
சூரியன்
காலத்திற்கு
வரிசை தந்திருக்கலாம்!
ஆனால்
காலத்திற்கு
வரலாறு தருபவர்கள்
மக்கள்!

காலம் இல்லாமல்
வரலாறு இல்லை!
ஆனால்
காலத்திற்கும்
வரலாறு தருபவர்கள்
மக்கள்!




கடந்த காலத்தை விளக்குவதும்
விளங்கிக் கொள்வதும்
சமுதாய நிகழ் காலத்தை
எதிர்கொள்ளவும்
வரும் காலத்தை உருவாக்கவும்
தேவைப்படுகிறது
மொழி!

காலத்தின் கடிவாளம்
சூரியன் கையில்
ஆனால்
காலத்தின் சாதனை வரலாறு
மொழியின் கைகளில்!

சாதனை இல்லாத காலம்
வரலாறு அற்ற அநாதை!

பெருவெடிப்பில் பிறந்தது
சூரியன் எனில்
மூளைக்குள் நடந்த
பெருவெடிப்பில் பிறந்தது
மொழியாம்!

விடுதலைக்கு அறிவு எனில்
அறிவுக்கு மொழி!
பூமிக்கு விடுதலை தந்தது
சூரியன் எனில்
மனிதர்களுக்கு விடுதலை தருவது
மொழி!

கடந்த காலம் நிகழ்காலம்
வரும் காலம் எனும்
முக்காலத்தையும் உணரத்
தேவைப்படுகின்றன
மொழியும் சூரியனும்!

கடந்த காலத்தை
நிகழ் காலத்துடனும்
வரும் காலத்துடனும்
இணைக்கின்றன
மொழியும் சூரியனும்!

காலத்தின் மறுபிறவியைக்
காட்டுகின்றன
சூரியனும் மொழியும்!

அதனால்
சூரியனையும் தமிழையும்
இணைத்துப் பாடுகிறது
தண்டியலங்காரப் பாடல்!

ஆண்டுகளைக்கூடத்
திருக்குறள் தந்த
திருவள்ளுவரை வைத்துத்
தி.மு. / தி.பி. என்றும்
கணக்கிடத் தொடங்கியுள்ளோம்!

அதனால்
தமிழர்கள்
முன்னும் பின்னுமாகப்
பார்த்துப் பயணிக்க
சூரியனும் தமிழும்
துணைநிற்பதால்
சேர்த்தே கொண்டாடுவோம்
பொங்கலையும்
தமிழ்ப் புத்தாண்டையும்!

உயிரினங்களுக்கு
மரபணு போலப்
பூமிக்கும் மொழிக்கும்
மரபணு சூரியன் போல!

அதனால்
வாழ்த்துகளுடன்
பொங்கலிட்டுக்
கொண்டாடுவோம்
பூமியின் மரபணுவை!



**ம.ரா.**

நன்றி – கணையாழி
ஜனவரி, 2026

### சேலம் மத்திய மாவட்டத்தில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

# திராவிடப் பொங்கல் - சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஜன. 3 -

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் மத்திய மாவட்டத்தில் மூன்று கட்டங்களாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, பரிசுப்பொருட்களை வழங்கிட வேண்டும்.

**ஒன்றியம் - பகுதி - பேரூர் அளவிலான விளையாட்டுப் போட்டிகள்!**

ஒன்றியம் - பகுதி - பேரூர் அளவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை ஜனவரி 3 ஆம் தேதி தொடங்கி ஜனவரி 9 வரை நடத்திட வேண்டும்.

கிரிக்கெட், வாலிபால், கபடி, கால்பந்தாட்டம், ஓட்டப்பந்தயம், கோகோ, இறகுபந்து (Badminton), கூடைபந்து (Basketball), குத்துச்சண்டை (Boxing),

தடகளம் (Athletics), வரிபந்தாட்டம் (Tennis), மிதிவண்டி ஓட்டுதல் (Cycling), கராத்தே, பளு தூக்குதல் (Weight lifting), யோகா, உடற்கட்டமைப்பு (Body Building), வளை பந்தாட்டம் (Hockey), எறிபந்தாட்டம்



(Handball), நெடுஞ்சாலை ஓட்டம் (Marathon), பானை உடைத்தல், வழுக்கு மரம் ஏறுதல், கோலப்போட்டி, கயிறாட்டம் (Skipping), கயிறு இழுத்தல் போட்டி, இசை நாற்காலி, கையுந்து போட்டி, கோலாட்டம், ஏழுக்கல் போட்டி, சாக்குப்பை நொண்டி விளையாட்டு, ஓவியபோட்டி என ஆண்பெண் இருபாலருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு பிரிவினருக்கும் குறைந்தபட்சம் தலா 3 போட்டிகளை நடத்திட வேண்டும் எனவும்

போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும் www.dravidapongal.in<http:p//www.dravidapongal.in> என்ற தளத்தில் பதிவு செய்திட வேண்டும்.

கழக மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

ஒன்றிய - பகுதி - பேரூர் அளவில் வெற்றி பெற்ற அணிகளைக் கொண்டு கழக மாவட்ட அளவிலான விளை யாட்டுப் போட்டிகளை ஜனவரி 10 ஆம் தேதி தொடங்கி ஜனவரி 13 வரை நடத்தி பரிசுகளை வழங்குவதெனவும்,

மாவட்ட அளவில் கலந்து கொள்ளும் அணிகளுக்கு டீஷர்ட், விளையாட்டு உபகரணங்களை மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்து வழங்கிட உள்ளது.

**மாநில அளவிலான போட்டிகள்!**

கழக மாவட்ட அளவில் வெற்றி பெறும் அணிகளைக் கொண்டு பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது.

ஜனவரி 14, 15 தேதிகளில் சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் ஊராட்சிகள் - வார்டுகள் அளவில் மகளிரைத் திரட்டி சாதி, மத, ஏற்றத் தாழ்வு பேதமற்ற “திராவிடப் பொங்கல்” வைத்து கொண்டாடப்பட வேண்டும்.

அனைத்து வீடுகள் முன்பும் “சமத்துவம் பொங்கட்டும் ; தமிழ்நாடு வெல்லட்டும் என எழுதி திராவிடப் பொங்கல் கோலமிட்டு, பெண்கள் - குழந்தைகளுக்கான கோலப்போட்டிகள் உள்ளிட்ட சிறு சிறு விளையாட்டுப் போட்டிகளை நடத்திட வேண்டும்.

**ஜனவரி 16 & 17**

**உழவர் திருநாள் - காணும் பொங்கல் - கலை இலக்கியத்தின் வாயிலாக திராவிட மாடல்**

மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடிடும் வகையில் ஊரில் பொதுவான இடத்தில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி, LED திரை அமைத்து முதலமைச்சர் அவர்களின் சிறப்புச் செய்தியுடன் கூடிய திரைத்திருவிழாமை நடத்திட வேண்டும் எனவும்.

இந்நிகழ்ச்சிகளை அனைத்து ஒன்றிய - பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்களும், சார்பு அணியினரும் இணைந்து எழுச்சியோடு நடத்திடவும் அதற்கான ஏற்பாடுகளை தொடர்ந்து செய்திட வேண்டுமெனவும் சேலம் மத்திய மாவட்ட தி.மு.க வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.